ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2304/43 - 2022 නොවැම්බර් මස 02 වැනි බදාදා - 2022.11.02

2304/43 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KO/DS/AD/FIL/75.
காணி அமைச்சின் கோவை இல.: 4-3/5/2020/HW/277.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கொலொன்னாவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 510, மீதொட்டுமுல்ல கிராம அலுவலர் பிரிவில், மீதொட்டுமுல்ல (கொலொன்னாவ நகரசபை எல்லைக் குட்பட்டது) கிராமத்தில் அமைந்துள்ள, கொழும்பு மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் 2022.09.13 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கொ. 9995 இல் விபரிக்கப்பட்டுள்ள 0.0079 ஹெக்டயார் இல் 1 தொடக்கம் 2 வரை உள்ள காணித் துண்டுகளின் (2 துண்டுகள்) விபரங்கள்:

01. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: வரிப்பண இல. 117/31/ஏ, மீதொட்டுமுல்ல வீதி; விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடம் உள்ளது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: எஸ்.டி. லசந்த பிரியதர்சன (காணி எடுத்தலுக்கு அவசியமாக உள்ளது. (ஆ.வ. 5239 இன் 170 ஆவது துண்டின் பகுதி)); விஸ்தீரணம்: 0.0060 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 2**

காணியின் பெயர்: வரிப்பண இலக்கம் கண்டு பிடிக்க முடியாது, மீதொட்டுமுல்ல வீதி; விபரம்: வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை உள்ளது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: - (மீதொட்டுமுல்ல வீதி, வரிப்பண இல. 117/31/ஏ இல் வசிக்கும் எஸ்.டி. லசந்த பிரியதர்சன உடன் பயனடைவோர், இலங்கை மின்சார சபையுடன் நிலத்தடி சேமிப்பு அமைப்பை நிறுவுதலுக்கு காணி எடுத்தல் அவசியமாக உள்ளது. (ஆ.வ. கொ. 8183 இன் 16 ஆவது துண்டின் பகுதி)); விஸ்தீரணம்: 0.0019 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம்



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.11.21 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு கொலொன்னாவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022.11.09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம்.ஏ.பி. ஜயகொடி,
பிரதேச செயலாளர்,
கொலொன்னாவ.

பிரதேச செயலகம்,
கொலொன்னாவ,
2022, ஒற்றோபர் 21.

EOG 11 - 0010

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: BD/KK/LND/6/4.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/2/2018/IR/497.

2022, மே மாதம் 30 ஆந் திகதியான திங்கட்கிழமை இல. 2282/17 என்ற வர்த்தமானியில் 05-0161 என்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கந்தகெடிய பிரதேச செயலாளர் பிரிவில் 32D, வாசனாகம கிராம அலுவலர் பிரிவில், தல்பிடிகல என்கிற காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.11.30 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு கந்தகெடிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022.11.16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ.எம்.யு.ஐ.என்.கே. திசானாயக்க,
பிரதேச செயலாளர்,
கந்தகெடிய.

பிரதேச செயலகம்,
கந்தகெடிய,
2022, ஒற்றோபர் 27.

EOG 11 - 0011

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.